

உடன்குடி கிறிஸ்தியா நகரம் டி.டி.டி.ஏ. பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை மீன்வளம், மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமை வகித்து தொடங்கி வைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், மருத்துவ பயனாளிகளுக்கு காப்பீடு சான்றிதழ்களையும் வழங்கினார்.உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை. மூ.ராமஜெயம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வகுமார், துணை அமைப்பாளர் கிருபாகரன், உடன்குடி ஒன்றிய செயலாளர்கள் பாலசிங், இளங்கோ, உட்பட பலர் பங்கேற்றனர்.



மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஒத்தக்கடை ஊராட்சி பெரியகுளம் கண்மாயினை ரூபாய் 7.73 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வானதி, செயற்பொறியாளர் இந்துமதி, கழக நிர்வாகிகள் அ.பா.ரகுபதி, வடிவேல் முருகன், ஒத்தக்கடை சரவணன், அழகு பாண்டி, விஜய் ஆனந்த் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

# கொளத்தூரில் அடிப்படை வசதிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை, நவ.3–

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (1.11.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு65க்குட்பட்ட சிவசக்தி நகர், மகாத்மா காந்தி நகர், கண்ணகி நகர் மற்றும் வினோபா நகர் ஆகிய பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் பணி, கழிவுநீர் கால்வாய் அமைத்தல், தெரு விளக்குகள் கூடுதலாக அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பிரச்சனைக்கு தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:–

கொளத்தூர் தொகுதி மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் தங்கு தடையின்றி குடிநீர், மின்சாரம் உள்ளிட்டவைகள் மேற்கொண்டு சிறப்புமிக்க தொகுதியாக திகழ்கிறது, இதற்கு முக்கிய காரணம் முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சி தான்.

கொளத்தூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பல்வேறு பகுதிகள் அரசுக்கு சொந்தமான பல இடங்களில் 30 ஆண்டுகளுக்கு மேல் வசித்து வரும் மக்களுக்கு அடிப்படை தேவைகள் இல்லை என்ற குறைகள் முதல்வர் அவர்கள் கவனத்திற்கு சென்றவுடன், தற்போது சிவசக்தி நகர், கண்ணகி நகர், அண்ணா நகர், மகாத்மா காந்தி நகர், வினோபா நகர் ஆகிய பகுதிகளில் பிரச்சினைகள் குறித்து துறை சார்ந்த உயர் அதிகாரியுடன் நேரடியாக ஆய்வுகள் மேற்கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இன்றைக்கு கொளத்தூர் பகுதிகளில் உள்ள அனைத்து தெருக்களிலும் இரண்டு மணி நேரம் ஆய்வு மேற்கொண்டோம்.

பொதுமக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம். தீர்க்கப்படாமல் இருக்கின்ற பல பிரச்சனைகளை ஒரு முடிவினை முதல்வர் அவர்கள் எடுப்பார்கள். கொளத்தூர் தொகுதி பொருத்தவரை முழுமையாக அனைத்து அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்பட்ட தொகுதியாக மாற்றுவது முதலமைச்சருடைய கனவு. இந்த கனவு ஏற்ற வகையில் குடிநீர், கழிவுநீர் வெளியேற்றுவதற்கு, பூங்கா, தடையில்லா மின்சாரம், திருமண மண்டபம் அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.





